8th September 1958]

SRI S. PAKKIRISAMI PILLAI : தலைவர் அவர்களே, இதற்கு வேண்டிய ஆதாரத்தை இப்போது காண்பித்தால் கனம் மந்திரி அவர்கள் அதற்கு தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : This is not the place to produce such evidence. The hon. Member may show it to the Hon. Minister later on.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப் பின்னால் என்னிடம் கொடுத்தால் அதை கவனிக்கிறேன்.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, ஜனவரி மாதம் 3-ம் தேதி கூட்டம் நடத்துவதற்கு அனுமதி கேட்டபோது அனுமதி மறுக்கப்பட்டது. பண்டித நேரு அவர்களுக்கு கருப்புகொடி காட்டுவதை விளக்குவதற்காக கூட்டம் கூட்டுவதற்கு அனுமதி வேண்டும் என்று கோரப் பட்டிருக்கிறது. அது மறுக்கப்பட்டது. அப்படியானால் சட்டபூர்வமான கூட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கு காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்போது நகரில் தடை யுத்தரவு இருந்தது. அதனால் அனுமதி மறுக்கப்பட்டது.

SRI K. VINAYAKAM : Sir, may I know whether the application to hold the meeting on the dates mentioned here was made in the name of Mr. S. Pakkirisami Pillai in his individual capacity, or was the application made in the name of the Labour Union of which he happens to be the leader?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no other information except what I have given just now.

Temples

* 100-GG *Q*.—SRI M. P. SARATHI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா :—

(அ) இந்த ஆண்டு நிதி வசதியற்ற ஏழைக் கோயில்களைச் செப்பனிட எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது ?

(ஆ) கடந்த மூன்று ஆண்டுகளில் எவ்வளவு செலவு செய்யப் பட்டுள்ளது ?

(இ) இந்த உதவி இஸ்லாமிய, கிருஸ்தவக் கோயில்களுக்கும் அளிக்கப் படுகின்றதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Rupees 3 lakhs.

(*b*) During 1955–56 .. .. .. Rs. 2 lakhs.
During 1956–57 .. .. .. Rs. 2 lakhs.
During 1957–58 .. .. .. Rupees Nil.

(*c*) No.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, கோவில்களில் ஏழை கோவில்கள், பணக்கார கோவில்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் அதில் இருக்கும் ஏழை கடவுள், பணக்கார கடவுள் இவர் களின் பட்டியல் இருந்தால் கொடுக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பராமரிக்க போதிய வருமானம் இல்லாத கோவில் ஏழைக்கோவில் என்று கருதப்பட்டு வருகிறது. கடவுள்களின் பட்டியல் என்னிடம் இல்லை.

[8th September 1958

SRI P. G. MANICKAM : ஹரிஜன சேரிகளில் இந்து மதத்தின் கீழுள்ள கோவில்கள் பல பாழைடைந்து கிடக்கின்றன. அவைகளில் சரியாக திருவிழாக்கள் பூஜைகள் இவைகள் எல்லாம் நடப்பதில்லே. இப்பேர்ப்பட்ட கோவில்களுக்கு உதவி கொடுக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பு ஹரிஜனங்கள் கோவில்களில் போகக்கூடாது என்று இருந்தது. அப்போது தனித்தனியாக கோவில்கள் அதிகமாக அவசியம் இருந்தன. இப்போது எல்லா கோவில் களிலும் போகலாம் என்பதை அங்கத்தினர்கள் உணருவார்கள் என்று எண்ணுகிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : சபாநாயகர் அவர்களே, இப் போது கொடுக்கப்பட்டுவரும் இரண்டு லட்சம் ரூபாய் போதாது என்று தெரிந்த விஷயம்தான். ஆகவே பணக்கார கோவில்களிலிருந்தோ அல்லது பணக் காரர்களிடமிருந்தோ பணத்தை எடுத்து ஏழைக் கோவில்களே பராமரிப்ப தற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதவும் கவனிக்கப் பட்டுதான் வருகிறது.

SRI M. P. SARATHI : இஸ்லாமிய கோவில்களுக்கு இப்போது நிதி உதவி அளிப்பதில்லே என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவ்விதம் உதவி வேண்டும் என்று அவர்களிடமிருந்து ஏதாவது மனுக்கள் வந்திருக்கின்றனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது அந்தமாதிரி யோசனே ஒன்றுமில்லே என்று சொன்னேன். முஸ்லீம் ஸ்தாபனங்களே பொறுத்தவரையில் "வாக்ப் ஆக்ட்" நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்த ராஜ்யத்திலும் அது அமுலுக்கு வந்திருக்கிறது. அந்த சட்டத்தின் கீழ் இவைகளுக்கு நிதி உதவி அளிப்பதுபற்றி கவனிக்கப்படும். கிருஸ்தவ கோவில்களேப் பொறுத்தவரையில் அநேகமாக எல்லாம் ப்ரைவேட்டாக இருப்பதால் யாரும் இதுவரை உதவி வேண்டும் என்று கோரவில்லே.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : ஸார், ராசிபுரம் தாலுகாவில் அழகா மொழியில் இருக்கும் சித்தர் கோவில் பராமரிப்புக்காக நிதி உதவி கோரி ஏதாவது விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றியெல்லாம் இப்போது என்னிடம் தகவல் இருக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லே.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : ஸார், இந்த சர்க்கார் மதசார் பற்றது என்று கூறிக்கொண்டிருக்கும்போது இந்து மத ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் கோவில்களுக்கு மாத்திரம் நிதி உதவி அளித்துக்கொண் டிருக்கிறது என்றும் மற்ற மதங்களின் கீழ் உள்ள ஸ்தாபனங்களுக்கு நிதி உதவி அளிப்பதில்லே என்றும் சொல்லுவதைப்பற்றி அமைச்சர் அவர் களின் அபிப்பிராயம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்த மத ஸ்தாபனங்களில் தவறுதல் நடந்தாலும் அதைப்பற்றி கவனித்து அவைகளேப் பராமரிப்ப தற்கு வேண்டிய நடவடிக்கைகள் அரசாங்கம் எடுத்துக்கொள்ளும்.

SRI V. SANKARAN : இந்து அற நிலேய பாதுகாப்பு போர்டு இருக்கிறது. அதே போல கிருஸ்தவ, இஸ்லாமிய அற நிலேய பாதுகாப்புபோர்டுகள் அமைக்காமல் இருக்கும் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் சொன்னேன். முஸ்லீம் அற நிலேயங்களேப் பற்றி சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவ அற நிலேயங்களேப் பற்றிச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

8th September 1958]

Sri P. S. CHINNADURAI : தஞ்சையில் பெரிய கோவில் என்று அழைக்கப்படும் பிரகதீஸ்வரர் கோவிலை பழுது பார்ப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இத்தகைய ஆலயங்களின் நிலைமை அப்போதைக்கப்போது அற நிலையப் பாதுகாப்பு இலாகாவிலும் கவனிக்கப்பட்டு ரிப்பேர் செய்யப்பட்டு வருகிறது.

Sri A. GOVINDASAMY : கடவுள் விஷயத்திலும் பொருளாதரா சமத்துவத்தை உண்டாக்க ஆட்சியாளர்கள் வேண்டிய நடவடிக்கை எடுப்பார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : எங்களுடைய நம்பிக்கை கடவுள் இதற்கெல்லாம் அப்பாற்பட்டவர்கள் என்பது.

Sri C. NADARAJA ODAYAR : நமது அமைச்சர் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது இந்த ஆண்டு எத்தனை கோவில்களைப் பார்த்திருக்கிறார்கள் என்று அறிவிக்க முடியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நான் இதைப் பற்றி ஒன்றும் குறிப்பு வைத்துக்கொள்ளவில்லை. ஆகையால் கணக்கு ஒன்றும் சொல்ல முடியாது.

Musical Instruments

* 100-HH *Q.*—**Sri A. VEDARATHNAM :** கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் சங்கீதக் கருவி செய்யும் தொழிற்சாலை ஒன்று கூட்டுறவு முறையில் நடைபெறுகிறதா ?

(ஆ) அங்கு என்னென்ன கருவிகள் செய்கிறார்கள் ?

(இ) இதற்கு அரசாங்கம் புரிந்து வரும் உதவி என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Musical instruments, such as veena, thambura, violin, flute, mirudangam, harmonium, etc.

(*c*) The following items of financial assistance have been given to the Tanjore Musical Instruments Co-operative Production and Sale Society by the State Government :—

I Reserve Fund grant under the State-aid to Industries Act.	**Rs. 2,000 (for raising the maximum borrowing power of the Society).**
II Working capital loan under the State-aid to Industries Act.	**Rs. 10,000.**

A scheme for the sanction of financial assistance to the society for reorganizing it by means of augmenting its working capital, sanction of free services of supervisory staff, installation of machinery and opening of sales depot at Madras is also under the consideration of Government.

Sri A. VEDARATHNAM : ஸார். சங்கீதக் கருவிகள் செய்யும் இந்தத் தொழிற்சாலையில் கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த பட்டியலில் நாதஸ்வரம் வரவில்லை. இப்போது நாதஸ்வரத்திற்குப் பள்ளிக்கூடம் வைத்து நடத்துகிறார்கள். நாதஸ்வரம் செய்யும் தொழிலாளிகள், தொழிற்சாலைகள் குறைவு, நாதஸ்வரம் செய்யக் கூடியவர்கள்